**செய்தி வெளியீடு எண்: 04/02/2021** **நாள்: 07.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் கட்டம்-1 விரிவாக்கத்தில் மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர் மூன்றாம் நாளாக ஆய்வு**

மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர், திரு. அபய் குமார் ராய், (பெங்களூரு வட்டம்), அவருடைய குழுவினருடன் இன்று (07.02.2021) புதிய வண்ணாரப்பேட்டை மற்றும் சுங்கச்சாவடி மெட்ரோ இரயில் நிலையத்தை ஆய்வு செய்தார்.

இன்றைய ஆய்வின்போது, மெட்ரோ இரயில் நிலையங்களின் உட்புறத்தோற்றம், பல்வேறு கட்டுமானப் பணிகள், பயணிகளுக்கான பாதுகாப்பு வசதிகள், அவசரத் தொலைபேசி வசதிகள், அறிவிப்புப் பலகைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், இரயில் தண்டவாளத்தின் அமைப்பு, தண்டவாள தூண் தாங்கிகளின் ஸ்திரத்தன்மை மற்றும் சிக்னல் அமைப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டன. வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையம் வரை (சுரங்கப்பாதை மற்றும் உயர்நிலைப்பாதை) சிக்னல் மற்றும் வேக சோதனையுடன் மெட்ரோ இரயில் ஓட்டச் சோதனை அதிக பட்சமாக மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் ஓட்டிச் சோதனை செய்யப்பட்டது.

ஆய்வுக் குழுவில் மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர் திரு. அபய் குமார் ராய் அவர்களுடன் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர்கள் திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), மற்றும் உயர் அலுவலர்கள் உடன் சென்றிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**